भारत की जनगणना
2027
CENSUS OF INDIA

जनगणना से जन कल्याण

CENSUS OF INDIA

இந்திய மக்கள் தொகை கணக்கெடுப்பு

2027



மக்கள் நலனுக்காக மக்கள் தொகை கணக்கெடுப்பு

மக்கள் தொகை கணக்கெடுப்பு
இயக்குநரகம், தமிழ்நாடு

மக்கள் தொகை கணக்கெடுப்பு ஒரு பார்வை

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் ஏழாவது அட்டவணையின் தொடர் எண் 69 இல் உள்ள யூனியன் பட்டியலின் [பிரிவு 246] கீழ் மக்கள் தொகை கணக்கெடுப்பு வருகிறது. மக்கள் தொகை கணக்கெடுப்புச் சட்டம் 1948 மற்றும் அவ்வப்போது திருத்தப்பட்ட இந்திய மக்கள் தொகை கணக்கெடுப்பு விதிகள், 1990 ஆகியவையும், இந்தியாவில் மக்கள் தொகை கணக்கெடுப்பை நடத்துவதற்கான சட்ட அடிப்படையை உருவாக்குகிறது. "கணக்கெடுப்பு" என்ற சொல் பொதுவாக "மக்கள் தொகை கணக்கெடுப்பு" என்று புரிந்து கொள்ளப்படுகிறது. இந்திய மக்கள் தொகை கணக்கெடுப்பு என்பது மக்கள் தொகை, வீடுகள் மற்றும் சமூக-பொருளாதாரம் குறித்த முழுமையான மற்றும் விரிவான தரவுகளை சேகரிப்பதற்கான நாடு தழுவிய மிகப்பெரிய நிர்வாகப் பணியாகும்.

இந்திய மக்கள் தொகை கணக்கெடுப்பிற்கு, 1872 ஆம் ஆண்டு முதல் பத்தாண்டுகளுக்கு ஒருமுறை கணக்கெடுப்பை நடத்தும் நீண்டகால பாரம்பரியம் உண்டு. சமீபத்திய மக்கள் தொகை கணக்கெடுப்பு 2011-ல் நடத்தப்பட்டது, அதே நேரத்தில் 2021-ல் திட்டமிடப்பட்ட மக்கள் தொகை கணக்கெடுப்பு கோவிட்-19 தொற்றுநோய் காரணமாக ஒத்திவைக்கப்பட்டது. 1872 ஆம் ஆண்டு முதல் தொடர்ச்சியான தொடரில் 16 வது மற்றும் சுதந்திரத்திற்கு பிறகு எட்டாவதாக நடைபெறவிருக்கும் இந்த 2027 மக்கள் தொகை கணக்கெடுப்பானது தரவு சார்ந்த நிர்வாகம் மற்றும் வளர்ச்சி மேம்பாட்டிற்கு மிக முக்கிய படியாக உள்ளது. இந்தியாவில் மக்கள் தொகை கணக்கெடுப்பு நடத்துவதற்கான அறிவிப்பு மத்திய அரசால் ஜூன் 16, 2025 அன்று இந்திய அரசிதழில் வெளியிடப்பட்டது.

இதுவரை கடந்து வந்த பாதை

ஆண்டு	கேள்விகளின் எண்ணிக்கை	குறிப்பு தேதி	மக்கள் தொகை	↑ ↓
1901	16	மார்ச் 1	23,83,96,327	--
1911	16	மார்ச் 10	25,20,93,390	5.7%
1921	16	மார்ச் 18	25,13,21,213	-0.3%
1931	18	பிப்ரவரி 26	27,89,77,238	11.0%
1941	22	மார்ச் 1	31,86,60,580	14.2%
1951	14	மார்ச் 1	36,10,88,090	13.3%
1961	13	மார்ச் 1	43,92,34,771	21.6%
1971	17	ஏப்ரல் 1	54,81,59,652	24.8%
1981	16	மார்ச் 1	68,33,29,097	24.7%
1991	21	மார்ச் 1	84,64,21,039	23.9%
2001	23	மார்ச் 1	1,02,87,37,436	21.5%
2011	29	மார்ச் 1	1,21,08,54,977	17.7%

என்னென்ன தரவுகள் சேகரிக்கப்படுகின்றன?

பீடுகளின் நிலைமை

வீடுகளின் நிலைமை குறித்த நுணுக்கமான தரவு, குடும்பத்திற்கு கிடைக்கும் வசதிகள், குடும்பத்தில் உள்ள சொத்துகள் முதலியவை.

க்கள் தொகை சார் பண்புகள்

வயது மற்றும் பாலினம், திருமண நிலை, இனவிருத்தி விவரங்கள், உறவுமுறை, குடும்பத்தின் அளவு போன்றவை.

மூக-பொருளாதார குறியீடுகள்

கல்வி, பொருளாதார நடவடிக்கை, இடப்பெயர்வு மற்றும் பிறந்த இடம் போன்றவை.

சமூக மற்றும் லாச்சார பண்புகள்

மதம், மொழி/ தாய்மொழி, மாற்றுத்திறன் பற்றிய விவரம் முதலியவை.

சாதிவாரி ணக்கெடுப்பு

நாட்டின் அனைத்து தனி நபர்களின் சாதி விவரங்கள் சேகரிக்கப்படும்.

ாவட்ட மக்கள் தொகை கணக்கெடுப்பு கையேடு

அனைத்து மாவட்டங்களின் கிராம/ நகர உள்கட்டமைப்பு மற்றும் குடிமை வசதிகள், விரிவான மக்கள் தொகை, சமூக மற்றும் பொருளாதார தகவல்கள்.

க்கள் தொகை கணக்கெடுப்பு ஏன் முக்கியமானது?

நிர்வாகம் & கொள்கை

அனைவருக்குமான தரவு சார்ந்த முடிவுகளை எடுப்பதற்கு தகவல் அடிப்படையிலான கொள்கை உருவாக்கம்.

அடிப்படை உள்கட்டமைப்பு

சாலைகள், மின்சாரம், சுகாதாரம் ஆகியவற்றை இலக்கு அடிப்படையில் மேம்படுத்த.

சுகாதாரம், கல்வி & உள்கட்டமைப்பு

மருத்துவமனைகள், பள்ளிகள் மற்றும் அத்தியாவசிய சேவைகளுக்கான திட்டமிடலுக்கு துணை செய்கிறது.

பேரிடர் தயார் நிலை

பாதிப்புக்குள்ளாக கூடிய மக்களை அடையாளம் கண்டு தக்க சமயத்தில் நடவடிக்கை எடுத்து, பேரிடரை எதிர்கொள்ளுதல்.

நகர்ப்புற/ கிராமப்புற திட்டமிடல்

குடியேற்ற முறைகள் மற்றும் மக்கள் தொகை மாற்றங்களை அறிந்து கொள்ள முடியம்.

கல்விசார் ஆராய்ச்சி

பொருளாதாரம், சமூகவியல், பொது சுகாதாரம் போன்ற துறைகளில் ஆய்வுகளுக்கு துணை நிற்கிறது.

நல்வாழ்வு நோக்கம்

எஸ்.சி, எஸ்.டி, பிற சமூகங்கள், மாற்றுத்திறனாளிகள் மற்றும் பாதிப்புக்குள்ளாகக் கூடிய சமூகத்தினருக்கான திட்டங்களை வலுப்படுத்துகிறது.

மக்கள் தொகை கணக்கெடுப்பு 2027
உத்தேச கால அட்டவணை

ஜூன் 16, 2025

01 — 2027 மக்கள் தொகை கணக்கெடுப்பின் நோக்கம் குறித்த அறிவிப்பு அரசிதழில் வெளியிடப்பட்டது.

ஜூலை 2025

02 — மாநிலங்கள்/யூனியன் பிரதேசங்கள் இந்த அறிவிப்பை தங்களது அரசிதழில் மறுவெளியீடு செய்தல் மற்றும் ஒருங்கிணைப்பு அதிகாரிகளை நியமித்தல்.

ஜனவரி 01, 2026

03 — இந்தியா முழுவதும் நிர்வாக எல்லைகளை இறுதி செய்தல்.

ஏப்ரல் - செப்டம்பர் 2026

04 — முதற்கட்டம்: வீட்டுப்பட்டியல் மற்றும் வீடுகள் கணக்கெடுப்பு (HLO) களப்பணி.

செப்டம்பர் 2026

05 — இரண்டாம் கட்டம்: மக்கள் தொகை கணக்கெடுப்பு லடாக் யூனியன் பிரதேசம் மற்றும் ஒத்திசைவற்ற பனிப்பொழிவு உள்ள பகுதிகளான ஜம்முகாஷ்மீர் யூனியன்பிரதேசம், ஹிமாச்சலபிரதேசம் மற்றும் உத்தரகண்ட் மாநிலங்கள் ஆகியவற்றில் நடைபெறும்.

பிப்ரவரி 2027

06 — இரண்டாம் கட்டம்: மக்கள் தொகை கணக்கெடுப்பு (PE) களப்பணி.

ஏப்ரல் 2027

07 — உத்தேச மக்கள் தொகை எண்ணிக்கை விவரங்களை வெளியிடுதல்.

முக்கிய முன்னேற்பாடுகள்:

பயிற்சி

மூன்று நிலை பயிற்சிகள் நடத்தப்படுவதன் மூலம், சுமார் 35 லட்சம் கணக்கெடுப்பாளர்கள், மேற்பார்வையாளர்கள் மற்றும் பிற மக்கள் தொகை கணக்கெடுப்புப் பணியாளர்களுக்கு பயிற்சிகள் அளிக்கப்படும்.

ஊடகத்தொடர்பு

பாரம்பரிய மற்றும் சமூக ஊடகங்களைப் பயன்படுத்தி நாடு முழுவதும் விழிப்புணர்வு மற்றும் பங்கேற்பிற்காக ஒருமுகப்படுத்தப்பட்ட விளம்பர பிரச்சாரம் செய்யப்படும்.

இந்திய தலைமைப் பதிவாளர் &
மக்கள் தொகை கணக்கெடுப்பு
ஆணையர் அலுவலகம்
உள்துறை அமைச்சகம்
இந்திய அரசு

@CensusIndia2027 @CensusIndia2027

@CensusIndia2027 @CensusIndia2027

www.censusindia.gov.in